# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.12.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) கௌரவ சரித்த ஹேரத் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 25.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

''இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் இதற்குமுன்னால் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள் ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்'' என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு அது

வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கைக்குள் அலலது வெளியில் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் ஆகிய துறைகளை பொறுப் பேற்று மேற்கொண்டு மேம்படுத்தி கற்கைகளுக்கு அனுசரணை வழங்குதல்;

(ஆ) ஸ்திரமான வங்கிக் கட்டமைப்பொன்றை பேணிவரவும் அதை விருத்தி செய்யவும் ஆய்வுகளை மேற்கொண்டு ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்;

(இ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் போன்ற துறைகளுக்கு பரிசில்கள் மற்றும் புலமைப்பரிசில் அல்லது வேறு ஏதும் உதவிகளை வழங்கி கற்கைகளையும் ஆய்வுகளையும் ஊக்குவித்தல்;

(ஈ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் போன்ற துறைகளை ஒழுங்கமைத்து ஆய்வுகளை மேம்படுத்தலும் அரசாங்கம், தனியார் மற்றும் சர்வதேச முகவர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் கற்கைகள் மற்றும் ஆய்வுக் கருத்திட்டங் களைப் பொறுப்பேற்றல், செயல்படுத்தல்;

(உ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகளில் கற்பித்தல் மற்றும் பயிற்சியளித்தல் விடயங்களை திட்டமிட்டு ஒழுங்கமைத்தல்;

(ஊ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகளுடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவையும் விழிப்புணர்வையும் மேம்படுத்தும் எண்ணத்தில் மாணவர்களையும் ஏனையோரையும் ஆய்வு செய்முறைகளில் பயிற்சியளித்தல்;

(எ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் துறைகளைச் சேர்ந்த தனது உறுப்பினர்களின் திறமைகளையும் தொழில்சார் நிபுணத்துவத்தையும் மேம்படுத்தும் முகமாக அவர்களின் அறிவை இற்றைப்படுத்தல்;

(ஏ) நிபுணத்துவ மற்றும் கல்விசார் பிரச்சினைகளை உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர் வெளியிட்டு, கருத்துக்கூறி, உரையாடி, கலந்துரையாடித் தீர்ப்பதற்கான மன்றமொன்றைத் தோற்றுவித்தலும் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் தொடர்பான பயனுறுதியான கொள்கையாக்கலுக்கு உதவுதல்;

(ஐ) உறுப்பினர்களிடையே சகோரத்துவம் புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்தி வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் தொடர்பாக அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்;

(ஒ) பொது அல்லது ஒரே விதமான ஆர்வத்தைக் கொண்டுள்ள வேறு நாட்டவர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள், நிறுவனங்களுக்கிடையே விழிப்புணர்வையும் கூட்டுறவையும் நட்பையும் மேம்படுத்தல்;

(ஓ) ஒத்த நோக்கத்தையுடைய வங்கித் தொழில் மற்றும் நிதிசார் துறைகளில் தேசிய, பிராந்திய அல்லது சர்வதேச சங்கங்களுடன் ஒன்றிணைதல்;

(ஔ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் பற்றிய அவ்வாறான ஆய்வுகள் மற்றும் கற்கைகளைப் பொறுப்பேற்று, மேம்படுத்தி தனது முன்னெடுப்பின் ஊடாக அல்லது உள்ளூர் ஒத்துழைப்புடன் அல்லது வெளிநாட்டு சங்கங்களுடன் சர்வதேச வரம்பிற்கு உட்பட்ட வகையிலும் மற்றும் குறிப்பாக இலங்கையில் நடாத்துதல்;

(க) தொழிலின் பொது நலன்களை மேம்படுத்தலும் பாது காத்தலும்;

(ங) கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் நடாத்தி ஆரோக்கியமான வங்கி நடைமுறைகளையும் பழக்கங்களையும் மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல்; மற்றும்

(2) கூட்டுத்தாபனத்தின் இலட்சியங்கள் பணிகள் எந்தவொரு அமைச்சு அல்லது அரச திணைக்களம் அல்லது எந்தவொரு மாகாண சபையிலும் ஏக காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணியொன்றுக்குமிடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**4.** (1) இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யயவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தின நோக்கங்களை அடைந்து கொள்ளத் தேவையான நிலங்கள் அல்லது கட்டிடங்களைக் கொள் வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல், நிர்மானப் பணிகள் உள்ளிட்ட புனர்நிர்மானப் பணிகளை மேற் கொள்ளவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் இலட்சியங் களை மேம்படுத்தல் பொருத்தமானவைகள் என கருதப் படக்கூடிய அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவோ கையாளவோ அல்லது விற்பனையில் ஈடுபடவோ;

(ஆ) எவ்வாறானதொரு கொள்வனவொன்றை மேற்கொள்ள, மானியம் ஒன்றை, பரிசொன்றைப் பெற்றுக்கொள்ள மரண சாசனம் மூலம் அல்லது வேறு வகையில் அதற்கு ஒப்படைக்கக்கூடிய அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை வைத்துக்கொள்ளவும் அந்த

சகலவிதமான ஆதங்களும் இச்சட்டதில் வியம்பியுள்ள பணிகளுக்காகக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக வேண்டியதுடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளின் பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி ஆதனங்களை விற்கவோ, அடகு வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, பரிமாற்றம் செய்யவோ அல்லாத விடத்து வேறு வழிகளில் நடவடிக்கைகள் மேற்கொள் ளவோ அதிகாரமம் உண்டு;

(இ) கூட்டுத்தாபனத்தின் இலட்சியங்களை அடைந்து கொள்வ தற்கு அல்லது அதன் தத்துவற்களை நிறைவேற்றும் வகையில் தேவைப்படக்கூடிய சகலவிதமான ஒப்பந்தங் கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றை நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தினால் அது விடயமாக அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தர் பிரதிநிதி ஒருவர் ஊடாக மேற்கொள்ளுதல் அல்லது செயற்படுத்தல்;

(ஈ) பிணைப்பொறுப்புடன் அல்லது அவைகள் இன்றியோ நிதியங்களை கடனாகப் பெற அல்லது நிதியங்களைத் திரட்ட மற்றும் பண ரீதியாக அல்லது பொருள் ரீதியான நன்கொடைகள், மானியங்கள், பரிசில்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஆனால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப் படுகின்ற சகல வகையிலுமான வெளிநாட்டு மானியக் கொடைகள், நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்காக விடயத்தில் நிதி விவகாரம் சாட்டப்பட்டுள்ள நிதி அமைச்சின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் எழுத்து மூலமான முன் அங்கீகாரத்தைப் பேரவை பெற்றுக் கொள்ள வேண்டும்;

(உ) மாற்று உண்டியல்களை. காசோலைகளை, கடன் உறுதிச் சீட்டுக்களை மற்றும் ஏனைய மாற்று முறை ஆவணங் களைத் தயாரிக்க, எழுத, ஏற்றுக்கொள்ள, கழிவு வழங்க, கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த, பேரம் பேச, கொள்வனவு செய்ய, விநியோகிக்கவும் மற்றும் எந்த வொரு வங்கியிலும் கணக்குகளை ஆரம்பிக்க, செயல் படுத்த, பேணிவர மற்றும் மூடிவிட;

(ஊ) பேரவை எடுக்கக்கூடிய தீர்மானத்திற்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு உடனடியாகத் தேவைப் படாதுள்ள ஏதும் நிதியங்கள் இருப்பின் அவைகளை முதலீடு செய்வதற்கு;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் சட்டரீதியான எந்தவொரு அறக்கட்டளைகளையோ ஏதுமொரு உண்மையான அல்லது தனிப்பட்ட ஆதனமொன்றைப் பொறுப்பேற்றல், பெற்றுக்கொள்ளுதல், நிறைவேற்றுதல், மேற்கொள்ளுதல் மற்றும் நிர்வகித்தல்;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற பிரகாரம் கூட்டுத்தாபத்திற்கான உத்தியோகத்தர் களையும் ஊழியர்களையும் நியமித்தல், வேலையில் அமர்த்துதல், ஈடுபடுத்தல், விலக்குதல், பணியை முடிவுக்குக் கொண்டுவருதல் அவர்கள் தொடர்பில் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவும் கூட்டுத்தாபனத்தினால் முடிவு செய்கின்ற பிரகாரம் ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும சேமலாப நிதிகளை வழங்குவதற்கும்;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ள விரிவுரைகள், கருத்தரங்குகள, மாநாடுகள் போன்ற வற்றை ஏற்பாடு செய்தல்;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் இலக்குகளுக்குச் சமமான இலக்கு களைக் கொண்டு செயற்படுகின்ற ஏனைய உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள தொடர்புகளைப் பேணிவருதல்; மற்றும்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் நோக்குளை அடையும் வகையில் அதன் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோர்களை உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியளித்தல் ஆகியவை களாகக் கருதக்கூடிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள;

(ஔ) இந்தச் சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் செயற்பாடுகள் ஆகியவற்றை முன்னெடுக்கத் தேவையான தற்செயல் மற்றும் துணைபோகக் கூடியதாகக் கருதப்படக்கூடிய மற்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள;

(2) எவ்வகையிலேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபன பணம் மற்றும் சொத்துக்கள் முற்றுமுழுதாகக் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை மேம்படுத்த மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அதன் எப்பகுதியையேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இக்கூட்டுத் தாபன ஊழியர்களுக்கு நேரடியாக அனுப்புதல் அல்லது வழங்குதல் பங்கு இலாபமாகவோ, மிகை ஊதியங்களாகவோ இலாபப் பங்கீடாகவோ வழங்க முடியாது.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், கட்டுப்பாடு, நிருவாகம் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் விதிகள் ஏற்பாடுகளுக்கும் அமைய, முகாமைப் பேரவை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப் பேரவை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் முகாமைப் பேரவையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்*

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாகவும், ஒவ்வொரு வகுப்பினருமான உறுப்பினர்களினாற் செலுத்தப்படற்பாலனவான

கட்டணங்களும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், உறுப்பினர்களை விலக்குதலும் அலலது அவர்களை விலக்குவதும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும், உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைப் பேணுதலும்;

(ஆ) ஒரு பதவிக் காலத்திற்குள் 3 வருடங்களைத் தாண்டாத கால எல்லையொன்றுக்காக பதவியொன்றை வகிப்பவர் ஒருவருக்கு அவரின் பதவியை வகிகக்கூடிய அடிப்படையும் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்காக தகமை பெறுகின்ற அடிப்படையின்கீழ் சபையின் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் தமது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள், நியதி நிபந்தனைகள்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் அத்துடன் சேவையாளர்களின் நியமனம், அவர்களின் தத்துங்கள், கடமைகள், பணிகள், நியதி நிபந்தனைகள்;

(ஈ) பேரவையினது கூட்டுத்தாபனத்தினதும் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அதற்கான கூட்டநடப்பெண் உட்பட அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் உறுப்பினர்களுக்கான தகைமையும், தகைமையீனமும்; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) மேற்படி 1 ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள் 3 மாதங்களுக்குள் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டியதுடன் அந்தத் திகதியிலிருந்து அது நடைமுறைக்கு வரும்.

(3) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படுகின்ற விதிகள் அதே போன்ற கூட்டமொன்றில் 1 ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி யொன்றைப் போன்று அதே முறையிலும் திருத்தியமைக்கப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம் என்பதுடன் மேலும் அது உட்பிரிவு 2 இன் கீழ் குறிப்படப்பட்டுள்ள பிரகாரம் வெளியிடப்படவும் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந் தோதராதல் வேண்டும்.

நிறுவனத்தின் சொத்துக்களை கூட்டுத்தாப னத்துக்கு உரித்தாக்கல்

**7**. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து,

(அ) நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும்;

(ஆ) நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் நிறுவகத்தின் எல்லா வரவுகளும் மற்றும் ;

(இ) நிறுவகத்தின் எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும் ஆவணங்களும்,

கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து 1 ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி–

(அ) நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா பொறுப்புக்களும் கூட்டுத் தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர் களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப்பட்ட வையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கை களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(உ) நிறுவகத்தின் அல்லது நிறுவகத்திற்கெதிராகத் தொடுக் கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும், சட்டவழக்கு நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வலுவுக்கிடப்படுதல் வேண் டும்.

*அங்கத்தவர் பதிவேடு*

**8**. பேரவையானது அதனது அங்கத்தவர்களது பெயர், முகவரி உள்ளிட்ட ஏனைய அத்தியாவசிய தகவல் அடங்கிய பதிவே டொன்றைப் பேணிவரும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்*

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட யாவும் பணமாகவோ பொருளாகவோ உள்ளடக்கியிருக்க வேண் டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் பெயரில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் பேரவையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய முறையில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்து கொள்ளும் விதமாக அவை முதலீடு செய்யப்பட வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளுமு் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட முடியும்.

கூட்டுத்தாபனத்தின கணக்குகளும், கணக்காய்வும் வருடாந்த அறிக்கையும்

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டானது கலண்டர் ஆண்டாக இருக்கும்.

(2) கூட்டுத்தாபனம் உரிய பிரகாரம் அதன் வருமானம், செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்குள் பேணிவரப்படல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குள் பேரவையினால் நியமிக்கப்படக்கூடிய ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காகய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருள்படும்.

(5) பேரவையானது ஒவ்வோர் நிதியாண்டுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரித்து கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட கணக்கறிக்கையுடன் குறித்த அறிக்கை வருடம் கழித்து 6 மாதங்கள் கழியமுன் வங்கி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(6) குறித்த நிதியாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கிடைக்கப்பட்ட நிதிகள் தொடர்பான தனியான கணக்கறிக்கையொன்றை துணைப்பரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகளுடன் இணைந்து அனுப்பப்படும்.

சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கம் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்திகதியன்று சங்கத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும்,

ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடை செய்யப்பட்டதும் அல்லது தடை செய்யப்பட்னவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் பேரவையினால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக உத்தியோகத்தர் இருவரினது முன்னிலையிலன்றி எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன். அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்*

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும். கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத்தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.